DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 497/2022** | | | |
| Deposition of Witness for | PW 1<br>Prosecution<br>Court | | | |
| Name | : **திருமதி. ஜெயமணி** | | : | |
| Father/Husband Name | : க.பெ.திரு. அண்ணாமலை | Calling | : | கூலி வேலை |
| Village | : அப்பமசமுத்திரம் | | : | |
| Taluk | : ஆத்துூர் | Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07.07.2025

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 12.09

1) நான் அப்பமசமுத்திரத்தில் வசித்து, கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகள் ஹரிகிருஷ்ணன், சாந்தி ஆகியோர்களை எனக்கு தெரியும். ஹரிகிருஷ்ணன் எனது தம்பி ஆவார். சாந்தி எனது தம்பியின் மனைவி ஆவார்.

2) தேதி, மாதம் நினைவில்லை. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் எனது வீட்டிற்கு அருகில் இருக்கும் எனது தாயாரின் வீட்டிற்கு சென்றிருந்தேன். எனது தாயாரை பார்த்துவிட்டு, எனது வீட்டிற்கு வந்துவிட்டேன். அன்று மாலை 06.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது, எதிரிகள் இருவரும் வீட்டிற்கு வந்து, என்னை கெட்டவார்த்தையால் பேசி, ஏன் வீட்டிற்கு எதுக்குடி வந்த என பேசி, என்னை கையால் அடித்துவிட்டார்கள். அவர்கள் அடித்ததில், எனது இடது கையில் காயம் ஏற்பட்டுவிட்டது.

3) அதன்பின்னர், காயம்பட்ட நான் ஆத்துூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். நான் மருத்துவமனையில் இருக்கும்போது, போலிசார்கள் வந்து, விசாரித்து, எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **( புகார் வாக்குமூம் அ.த.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை** இல்லை

முடிவு நேரம் 12.15

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

Sd/-A.Anis Fathima,
Judicial Magistrate No.1,
Attur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. .. **CC. 497/2022** | | | |
| Deposition of Witness for | PW 2<br>Prosecution<br>Court | | | |
| Name | : **திரு.அண்ணாமலை** | | : | |
| Father/Husband Name | : த.பெ. திரு. அய்யாதுரை | Calling | : | கூலி வேலை |
| Village | : அப்பமசமுத்திரம் | | : | |
| Taluk | : ஆத்துார் | Age | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07.07.2025

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 12.16

1) நான் அப்பமசமுத்திரத்தில் வசித்து, கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி 1 ஜெயமணி எனது மனைவி ஆவார். எதிரிகள் ஹரிகிருஷ்ணன், சாந்தி ஆகியோர்களை எனக்கு தெரியும். ஹரிகிருஷ்ணன் எனது மனைவியின் தம்பி ஆவார். சாந்தி எனது எனது மனைவியின் தம்பியின் மனைவி ஆவார்.

2) கடந்த 26.06.2022 அன்று மாலை 06.00 மணியளவில், எனது மனைவி, அவரின் தாயாரின் வீட்டிற்கு சென்றிருந்தார். எனது மனைவி, அவரது தாயாரை பார்த்துவிட்டு, வீட்டிற்கு வந்தார். அதன்பிறகு, அன்று மாலை 06.00 மணியளவில், நானும், எனது மனைவியும் வீட்டில் இருந்தபோது, எதிரிகள் இருவரும் என் வீட்டிற்கு வந்து, எனது மனைவியை கெட்டவார்த்தையால் பேசி, என் வீட்டிற்கு எதுக்குடி வந்த என பேசி, எனது மனைவியை கையால் அடித்துவிட்டார்கள். ஹரிகிருஷ்ணன் கையில் மூங்கில் தடி இருந்தது. அந்த தடியில் எனது மனைவியின் இடது பக்க கையில் அடித்துவிட்டார்கள். நாங்கள் லேசான காயம் என்று நினைத்துக்கொண்டு, ஆத்துார் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன். மருத்துவமனையில் எனது மனைவிக்கு அடிப்பட்ட இடத்தில் நுண்கதிர் படம் எடுக்கப்பட்டது, அதில் எலும்பு முறிவு என்று தெரிந்தது. நான்கு நாட்கள் அரசு மருத்துவமனையில் இருந்தோம். அதன்பின்பு, தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை** இல்லை

முடிவு நேரம் 12.23

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

Sd/-A.Anis Fathima,
Judicial Magistrate No.1,
Attur.